11.11.2025 O.S 107/2018 .வா.சா1 வள்ளியம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 19 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனதுமாமியார் பெயர் பிரமு அம்மாள் என்றால் சரிதான். பிரமு அம்மாளின் தாயார் பெயர் பேச்சியம்மாள் என்றால் சரிதான். பேச்சியம்மாளின் தகப்பனார் பெயர் பெருமாள் செட்டியார் என்றால் சரிதான். பெருமாள் செட்டியாரின் உடன்பிறந்தவர்கள் யார் என்று தெரியுமா என்றால் பிரமன், முத்து, ராமன், அருணாசலம் ஆகியோர்கள் ஆவார்கள். இவர்கள் 5 பேரும் ஆண்டி செட்டியாரின் மகன்கள் என்றால் சரிதான். ஒத்தபனையான் கோவிலுக்கு எனது மாமியாரின் தாத்தா பெருமாள் செட்டியார் மற்றும் அவரது சகோதரர்கள் வரி கொடுத்து வந்தார்கள் என்றால் இல்லை. சாமி கும்பிட்டு வருவார்கள். பெருமாள் செட்டியாரின் தாத்தா பெயர் புணமாலை என்றால் அது எனக்கு தெரியாது. புணமாலை செட்டியாரும் அவரது அண்ணன், தம்பிகளும் அந்த ஒத்தபனையான் கோவிலை பல ஆண்டுகளாக வழிபாடு செய்து வந்தார்கள் என்றால் தெரியாது. எனக்கு சொந்த கீழப்பாவூர் ஆகும். என்னை திருமணம் செய்த கொடுத்தது மேலசெவல் ஆகும். கீழப்பாவூர் கிராமத்தில் வாணியர் செட்டியார் சுமார் 1000 பேர்கள் உள்ளார்கள் என்றால் இருக்கலாம். அவர்கள் யாரும் வழிபாடு செய்யவில்லை என்றால் சரிதான். ஆண்டி செட்டியாரின் ஆண் வாரிசுகளும், அவருடைய சகோதரரின் ஆண் வாரிசுகளும் வழிபாடு செய்து வந்தார்கள் என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் இரண்டு கல் செக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு கல் செக்குகள் 40 வருடமாக பயன்பாடுகள் இல்லாமல் உள்ளது என்றால் 20 வருடங்களாக பயன்பாட்டில் இல்லை. கோவிலுக்கு அருகில் இருந்த கல் செக்கை திருவிழாவிற்காக எடுத்து விட்டார்கள் என்றால்

நாங்கள் தான் எடுத்தோம். எங்களுடைய இடத்தில் இருந்ததால் எடுத்து விட்டோம். அந்த கல் செக்கில் 5 மணி நேரம் சுற்றினால் 10 லிட்டர் எண்ணெய் பிரித்து எடுக்கலாம் என்றால் சரிதான். பெருமாள் செட்டியாரும் அவரது உடன்பிறந்த 4 பேரும் தனிதனியாக முறை வைத்து கல் செக்கை ஆட்டி வந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. கல் செக் இடத்தை மாடு சுற்றி வருவதால் பிரிக்க முடியாது என்றால் இடமாக தான் உள்ளது. பிரிக்க முடியும். மேல்பக்கம் கல் செக் எடுக்கப்பட்டுவிட்டது என்றும்,கீழ்பக்கம் கல்செக்கு உள்ளது என்றால் உள்ளது. நான் கீழ்பக்கமுள்ள சொத்தை தான் சொல்லியுள்ளேன் என்றால் கோவிலுக்கு முன்னால் உள்ள 6 செண்ட் இடத்தை சொல்லுகிறேன். புல எண் 1026/29 ல் இந்த இடம் உள்ளது என்றால் சர்வே எண் தெரியாது. மொத்தம் 12 செண்ட்இடம் உள்ளது என்றும் அந்த இடம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த இடம் கீழ்பக்கமா, மேல்பக்கமா என தெரியாது என்றால் இரண்டும் சேர்ந்து தான் உள்ளது. வழக்குரையில் 12 செண்ட் சொல்லப்பட்டுள்ளது என்றும், நான் கீழ்பக்கம் உள்ள சொத்தை மட்டும் தான் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. கீழ்பக்கம் உள்ள இடத்தில் தான் செக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த செக்கை எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்றால் பயன்படுத்த முடியாது. நான் சொல்வது தவறு என்றும் அந்த செக்கை எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்றால் சரியல்ல. கல் செக் எண்ணெய் தற்போது பிரபலமாக உள்ளதால் அதை எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்றால் சரியல்ல. எனது அப்பா எவ்வளவுபகுதி இடத்தை வாங்கினார் என்றால் தெரியாது. எனது அப்பா வாங்கிய இடமானது தவறான விதாச்சாரம் என்றால் சரியல்ல. பாப்பாத்தியம்மளுக்கு முத்தையா, கோபால்,

முத்தம்மாள், வள்ளி, சரஸ்வதி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்குதெரியாது. பாப்பாத்தியின் அப்பா ஆதினத்துடன் உடன்பிறந்த நபர் சுடலை என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. ஆதினத்தின் அப்பா மாசானம் என்பவருடன் வேலுச்செட்டியாரும், அய்யம்பெருமாள் செட்டியாரும் உடன்பிறந்த நபர்கள் என்றால் தெரியாது. இந்த 3 பேரும் ஆதின செட்டியாரின் தாத்தா முத்துசெட்டியாரின் பிள்கைள் என்றால் தெரியாது. அதனால் என் அப்பாவின் ஆவணத்தில் கண்டுள்ளவாறு விதாச்சாரம் தவறானது என்றால் சரியல்ல. ஆதின செட்டியாரின் தாத்தா முத்து செட்டியாரின் குமாரரான மாசான செட்டியாரின் சகோதரர்கள் வேலு, அய்யம்பெருமாள் ஆகியோர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பங்கை 3ம் பிரதிவாதி கோவிலுக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. என் மாமியார் பிரமு அம்மாளுக்கு 2018ம் ஆண்டு வேறு சொத்துக்கள் இருந்தது என்றால் என் மாமியாரின் அம்மா சில சொத்துக்களை கொடுத்துள்ளார். என் மாமியாரின் அம்மாள் பேச்சியம்மாளுக்கு சில சொத்துக்கள் உள்ளது என்றால் உள்ளது. என் அப்பாவிற்கு 10வீடுகள் உள்ளது என்றால் இருந்தது. ஒரு ஆயில்மில் வைத்திருந்தார் என்றால் சரிதான். எனது அப்பா வீட்டு மனைகள் வைத்திருந்தார் என்றால் இல்லை. என் அப்பா இறக்கும் வரை வழக்கு சொத்தை பொறுத்து பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். பிரமு அம்மாள் மூலமாகவும், நரசிங்க செட்டியார் மூலமாகவும் வந்த சொத்தை பொறுத்தும் எனது தம்பி சொத்தை பிரித்துதர மறுப்பதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பேச்சியம்மாள் மற்றும் நரசிங்க செட்டியாருக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களை வழக்கில் காட்டவில்லை என்றால் சரியல்ல. பேச்சியம்மாளுக்கும் பாத்தியப்பட்ட

இதர சொத்துக்களையும், நரசிங்க செட்டியாரின் இதர சொத்துக்களையும் காண்பிக்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. கோவிலின் முகப்பு மண்டபம் அமைத்து 20 வருடம் இருக்குமா என்றால் இல்லை 15 வருடம் இருக்கும். என் கணவர் பெயர் ஜெயராம் செட்டியார் ஆவார். எனது கணவர் உயிருடன் உள்ளார். முகப்பு மண்டபம் கட்டும் போது அதற்கு முன்னால் உள்ள சொத்தை எனது கணவர் பாகம் பிரித்து தர கோரவில்லை என்றால் சரியல்ல. அதையும் சேர்த்து தான் பயன்படுத்தி வருகிறோம். பிரமு அம்மாள் இருக்கும்போதே செக்கு பயன்பாடு இல்லாமல் இருந்ததால் வாய்மொழியாக கோவிலுக்கு விட்டு கொடுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. ஆதின செட்டியாரின் கடனை கொடுக்க முடியாததால் தவறான விகிதத்தில் சொத்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா கிரையமாக வாங்கியுள்ளார். என் அப்பா தவறான விகிதத்தில் சொத்தை வாங்கியதாலும், செக்கு பயன்பாட்டில் இல்லாததாலும் கோவிலுக்கு சொத்தை கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள கொடிவழி தவறானது என்றால் சரியல்ல. நான் உண்மை விபரங்களை மறைத்து பொய்யான வழக்கைதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி மக்களை வழிபடவிடாமல் தடுப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நரசிங்க செட்டியார் மற்றும் பேச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்களை சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது தற்போது 3ம் பிரதிவாதி பயன்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. அதனால் சொத்து விபரத்தை காட்டும் போது சப்பாணி

மாட பீடத்தையும், உண்டியலையும் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல,. இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.